**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 2052/2022 PW . 1**

Name : அற்புதராஜ் Fathers / Name : குழந்தைசாமி

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2024

**எதிரி ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது கழநிவாசல் ஸ்ரீகாமாட்சிஅம்மன் கோவிலில் நிர்வாகியாக உள்ளேன். 2018ம் ஆண்டு மார்ச் மாதம் தேதி நினைவு இல்லை. எங்கள் கோவில் திருவிழா நடந்து கொண்டிருந்ததால் அதற்கான பொருட்கள் வாங்கிகொண்டு திரும்பி வந்து பார்த்தபோது கோவிலில் இருந்த பித்தளை குத்துவிளக்கு மற்றும் பித்தளை செம்பும் காணாமல் போயிருந்தது. உடனே எங்கள் கோவில் சிசிடிவி கேமிராவில் ஆய்வு செய்தோம். அதில் கோவிலுக்குள் வந்து மேற்கண்ட பொருட்களை திருடிச்சென்ற நபரை தெரிந்துகொண்டோம். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் ஆஜர் எதிரி தான் வழக்கு சொத்தை சம்பவ தினத்தில் திருடி சென்ற நபர் ஆவார். மறுநாளும் ஆஜர் எதிரி கோவிலுக்கு வந்தார். உடனே நாங்கள் அவரை பிடித்து கொண்டு சென்று காரைக்குடி வடக்கு காவல்நிலையத்தில் ஒப்படைத்து புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படுவது தான் சம்பவம் குறித்து நான் கொடுத்த புகார் ஆகும். அது அதசாஆ. 1 ஆகும். பிறகு நீதிமன்றத்தில் இருந்து வழக்கு சொத்தான குத்துவிளக்கு மற்றும் சொம்பை நீதிமன்றத்தில் மனு செய்து இடைக்கால பராமரிப்பில் பெற்று சென்றோம். இதுகுறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

வழக்கு சொத்தை காவல்நிலையத்தில் இருந்து நான் தான் பெற்று சென்றேன். நீதிமன்றம் மூலம் பெறவில்லை. புகார் கொடுத்து ஒரு வாரம் கழித்து பொருட்களை பெற்று சென்றேன். காவல்நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். அந்த சொத்தில் குறிப்பிட்ட அடையாளம் உள்ளதா என்றால் 2 பொருட்களிலும் எங்களது கோவில் பெயர் எழுதப்பட்டிருந்தது. புகார் கொடுத்து சுமார் ஒரு வாரம், 10 நாட்கள் கழித்து காவல்நிலையத்திற்கு சென்று பொருட்களை அடையாளம் காண்பித்து

பெற்றுக்கொண்டோம். சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்துவிட்டோம். கோவில் டிரஸ்டில் நான் உறுப்பினராக உள்ளேன். நான் ஒரு கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அந்த கோவில் காமாட்சி அம்மன் என்ற இந்து கோவில் என்றால் சரிதான். அதில் தான் நான் டிரஸ்டி ஆக உள்ளேன். என்னுடன் காவல்நிலையத்திற்கு உடையார், கருப்பையா ஆகியோர் வந்தனர். சம்பவத்தின்போது கோவில் திருவிழா என்பதால் பொதுமக்கள் அதிகம் பேர் இருந்தார்களா என்றால் இல்லை. நான் அந்த கோவிலில் டிரஸ்டி இல்லை என்றும் காவல்நிலையத்தில் புள்ளிவிபரத்திற்காக பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கோவில் நிர்வாகிகள் தான் இந்த வழக்கின் மற்ற சாட்சிகள் ஆவர். காவல்நிலையத்திற்கு நான் சென்றபோது அங்கு ராஜேந்திரன், பாலமுரளிகிருஷ்ணா ஆகியோர் இருந்தார்களா என்றால் தெரியாது. நான் சொல்வது போல திருட்டு எதுவும் நடைபெறவில்லை இல்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 2052/2022 PW . 2**

Name : **உடையார்** Fathers / Name : **வட்டப்பன்**

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2024

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

நான் தற்போது கழநிவாசல் ஸ்ரீகாமாட்சிஅம்மன் கோவில் நிர்வாகியாக இருந்தேன். 16.02.2018 அன்று காலை 10 மணிக்கு எங்கள் கோவில் மடப்பள்ளியில் இருந்த பித்தளை பானை, பித்தளை குத்துவிளக்கை வழக்கின் எதிரி திருடி சென்றுவிட்டார். அதனை சிசிடிவி கேமிராவை பார்த்து தெரிந்துகொண்டோம். 2 நாட்கள் கழித்து எதிரி கோவிலுக்கு வந்தபோது அவரை பிடித்து காவல் நிலையத்திற்கு ஒப்படைத்தோம். இது சம்பந்தமாக போலீசார் மறுநாள் எங்கள் கோவிலுக்கு வந்த திருடு நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் வரைபடம் வரைந்து விசாரித்தார்கள். நான் அதற்கு சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன். **பார்வை மகஜர் அதசாஆ. 2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

கருப்பையா, அற்புதராஜ், நான் கையெழுத்து போட்டோம். பார்வைமகஜரில் என்ன எழுதி யிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். 8 வருடங்கள் ஆகிவிட்டதால் நினைவு இல்லை. சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து நான் கையெழுத்து செய்தேன். நான் காவல்நிலையத்தில் வைத்து தான் அதில் கையெழுத்து செய்தேன். போலீசார் விசாரிக்கும்போது பித்தளை குத்துவிளக்கு, செம்பு காணாமல் போய்விட்டதாக சொன்னார்கள் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை: இல்லை